# கோதுமை

**பயிர் மேம்பாடு**

**1. பருவம் மற்றும் இரகம்**

**சாகுபடிக்குகேற்ற மாவட்டங்கள்**

மலைச்சார்ந்த மற்றும் அதன் அருகில் உள்ள சமவெளிப்பகுதிகள். தேனி, திண்டுக்கல், கரூர், கோவை, ஈரோடு, சேலம், தர்மபுரி, வேலூர், திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களிலுள்ள மலைப்பகுதிகள்.

**பருவம்**

அக்டோபர் 15 முதல் நவம்பர் முதல் வாரம் வரை விதைப்பிற்கு ஏற்ற பருவமாகும். நவம்பர் 15க்குள் விதைப்பினை கண்டிப்பாக முடித்துவிடவேண்டும்.

**இரகம்** கோ.வெ. (கோ) 1

**கோதுமை - இரகங்களின் விவரம்**

| | | |
|---|---|---|
| **விவரம்** | : | கோ.வெ. (கோ)1 |
| பெற்றோர் | : | எச்டி2646 / எச்டபிள்யூ 2002 ஏ / சிபிஏஎன் 3057 |
| வயது (நாட்கள்) | : | 85-90 |
| தண்டின் நிறம் | : | நேரானது |
| உயரம் (செ.மீ.) | : | 73-78 |
| தூர்கள் | : | 5-6 |
| குதிர் வடிவம் | : | பியூசிபார்ம் (முள்ளங்கி வடிவம்) |
| தானியத்தின் நிறம் | : | பழுப்பு |
| தானிய மகசூல் (கிலோ / எக்டர்) | : | 2364 |
| சிறப்புக் குணங்கள் | : | சாயாத செடி மற்றும் மணிகள் உதிராத தன்மை, தண்டு மற்றும் இலை துருநோய் தாக்குதலை தாங்கும் தன்மை, சப்பாத்தி மற்றும் ரொட்டி செய்ய உகந்தது. |